# உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும் யோபு 8 : 17

என் அன்பு சகோதரியே, சகோதரனே,

**வேதம் சொல்கிறது,**

**உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்.**

ஆரம்பத்தைப் பாராதே. முடிவைப் பார். விசுவாசத்தோடே செய். நீ செய்கிறதை நம்பிக்கையோடே செய். எதிர்பார்ப்போடே செய். சூழ்நிலையைப் பாராதே. எதிர்ப்பை பாராதே. நஷ்டத்தைப் பொருட்படுத்தாதே. அவமானத்தை எண்ணாதே. சிந்தையை சிதற விடாதே. தோல்வியைக் கண்டு துவளாதே.

**ஏனெனில் வேதம் சொல்லுகிறது,**

**உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும்,**

**உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும் –** என்பதாக.

ஆதலால், கீழ்க்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**இயேசுவின் நாமத்தினால், என்னுடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்.**

அடுத்த பத்திரிக்கை உங்கள் கையில் கிடைக்கும் வரையில் அப்படியே சொல்லுங்கள்.

**பக்தன் பாடுகிறார் . . .**

மலைபோல வருவதெல்லாம் பனிபோல மறைந்திடுமே
உன்னதரின் கிருபைகளும் எந்தனை சூழ்ந்திடுதே.
தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களிகூறு . .

இந்தப் பாடலை உங்கள் படுக்கையிலே பாடிக் கொண்டே இருங்கள். வேலை செய்யும்பொழுது பாடிக் கொண்டே இருங்கள், பிரயாணத்திலே பாடிக் கொண்டே இருங்கள். **புது நம்பிக்கை பிறக்கும்.**

**யோசேப்பின் ஆரம்பம் : ( ஆதி. 37 : 22 )** : யோசேப்பை இந்தக் குழியிலே போட்டு விடுங்கள்.

**யோசேப்பின் முடிவு : ( ஆதி. 50 : 21 )** : நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன்.

**யோபுவின் ஆரம்பம் : (யோபு 2 : 9 )** : தேவனைத் தூஷித்து, ஜீவனை விடும். ( மனைவி குரல் )

**யோபுவின் முடிவு : ( யோபு 42 : 10 )** : யோபுவுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்.

**அன்னாளின் ஆரம்பம் : 1 சாமு. 1 : 7** : அவள் சாப்பிடாமல் அழுது கொண்டிருப்பாள்.

**அன்னாளின் முடிவு : 1 சாமு. 9 : 1** : என் இருதயம் கர்த்தருக்குள் களிகூறுகிறது.

**இதைத்தான் பிரசங்கி 7 : 8 சொல்கிறது,**

**ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும், அதின் முடிவு நல்லது.**

**1 பேதுரு 4 : 7** : எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று.

பரிசுத்த ஜீவியத்தை வாஞ்சிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே

**உங்கள் முடிவு என்ன தெரியுமா ?**

**ரோமர் 6 : 22 :** பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன். முடிவோ நித்திய ஜீவன்.

**1 யோவான் 2 : 25 :** நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.

கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுவோம்.

**உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும். ஆமென்.**

**பக்தன் பாடுகிறார்**

நான் விசுவாசிப்போர் இன்னார் என்று அறிவேன்,
என்னையே படைத்திட்டேன், அவர் கரத்தில்
முடிவு வரை என்னை நடத்திடுவார்,
முற்றிலும் அவர் பெயரே
சீயோனிலே என் திட அஸ்திபாரம் கிறிஸ்துவே
அவர் நான் என்றும் நம்பும் கன்மலை

மேற்கண்ட பாடலை அடிக்கடி இந்த மாதத்தில் பாடுங்கள்.

**உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்.** தேவனுக்கே மகிமை.